***<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.</u>***

***<u>DATE : 17.07.2026</u>***

Case No. : OS.95/2022

Deposition of Witness for Plaintiff : PW.1

Name : ஜெயராமசந்திரன் த/பெ. பெருமாள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of July 2026

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 04.06.P.M)**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது சொந்த ஊர் எது என்றால் பெங்களூர் ஆகும். தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். பெங்களூரில் வசிக்கும் இடம் சொந்த வீடு என்றால் சரிதான். அங்கு பட்டாவிற்கு A காத்தா, B காத்தா என்று சொல்வார்கள் என்றால் சரிதான். A காத்தா என்ற ஆவணம் முக்கியமான ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் எத்தனை ஏக்கர் சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் 9 ஏக்கர் 75 செண்ட் காட்டப்பட்டுள்ளது. B அட்டவனை சொத்து B மெமோ நிலம் என்றால் சரிதான், அது 1.20 ஏக்கர் கொண்டது என்றால் சரிதான். A அயிட்ட சொத்திற்கு உண்டான ஆவணங்களே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரை உள்ளவை என்றால் சரிதான். A அயிட்ட சொத்தினை என் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் 4 கிரைய ஆவணங்களாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள ஆவணங்களை பெற்றுள்ளோம் என்றால் சரிதான். A அயிட்ட சொத்தினை பொறுத்து எந்த தொந்தரவும் இல்லாமல் அமைதியான சுவாதீனத்தில் அனுபவித்து வருகின்றேன் என்றால் சரிதான்.

2. B அட்டவணை சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். B அட்டவணை சொத்திற்கு எனது பெயரிலோ எனது மனைவி

பெயரிலோ சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். B அட்டவணை சொத்தில் அனுபவம் செய்ய உரிமை உண்டு என்றால் சரிதான், அதனை தனது பெயருக்கு பாத்தியப்பட்டது என உரிமை கோர முடியாது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தில் உள்ள நிலத்தினை அரசாங்கம் கேட்கும் போது கொடுக்கப்படவேண்டும் என்றால் சரிதான். அரசாங்க நிலத்தினை ஆக்கிரமித்து அதற்கு தண்ட பணமாக கட்டுவதன் பெயரில் தான் B மெமோ நிலத்தினை அனுபவிக்க முடியும் என்றால் சரிதான். வெள்ளையன் என்பவரும், சாந்தகுமாரி என்பவரும் B அட்டவணையில் உள்ள நிலத்திற்கு தண்ட தீர்வையாக B மெமோ செலுத்திய ரசீதுகள் தான் வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.21 வரை என்றால் சரிதான். 2008–ம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு B மெமோவிற்கான பணம் அரசாங்கத்தால் வாங்கப்படவில்லை. A அட்டவணை சொத்தினை நான் கிரையம் பெற்றது 2011–ம் ஆண்டில் என்றால் சரிதான்.

3. விவசாய நிலத்திற்கு செலுத்தக்கூடிய தீர்வை பணத்தினை மட்டுமே செலுத்தக்கூடாது என்று 2008–ம் ஆண்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்றும், B மெமோ பணம் செலுத்தக்கூடாது என்று எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் பணம் செலுத்தவேண்டாம் என்று வருவாய் அதிகாரிகள் சொன்னதால் பணம் செலுத்தவில்லை. இவ்வழக்கில் B அட்டவணை சொத்தினை பொறுத்து மட்டுமே பரிகாரம் கோரப்படவேண்டும் என்றும், A அட்டவணை சொத்தினை பொறுத்து பரிகாரம்

கோரப்படவேண்டியதில்லை என்றால் சரிதான். 15.06.2022-ம் தேதியன்று நான் ஏற்காட்டில் இருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் பல நபர்கள் B அட்டவணை சொத்தில் அத்துமீறி நுழைந்து 4 குச்சிகள் நட்டு மேற்படி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தில் கூரைபோன்று போட்டுக்கொண்டிருந்தனர்.

4. அன்றைய தினம் யார் வந்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் அந்த ஊரின் கவுன்சிலர் மற்றும் அவரது கணவர் மற்றும் பலர் இருந்தனர். உண்மையில் அன்றைய தினம் வேலையில்லாத நபர்களுக்கு பட்டுப்புழு வளர்ச்சி துறையிலிருந்து வேலைவாய்ப்பு ஏற்படுத்திதர வழக்கு சொத்தான B அட்டவணை சொத்திற்கு வந்து பார்வையிட்டனர் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மேற்படி சங்கதி குறித்து குறிப்பிடப்பட்டு காக்கம்பாடியிலுள்ள நிலமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அரசாங்க அலுவலர்கள் யாரும் வழக்கு சொத்தின் இடத்திற்கு அன்றைய தினம் வரவில்லை. மேற்படி ஆவணத்தில் எனது சொத்தினை குறித்தும் குறிப்பிடப்படவில்லை. B அட்டவணை சொத்தினை அனுபவித்து வருவது சம்மந்தமாக என் பெயரில் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், எனக்கு முன்பு இருந்த உரிமையாளர் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். போலீசாரிடம் புகார் கொடுத்தது குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் தேவையான தரப்பினரான மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், கிராம

நிர்வாக அலுவலர் போன்றவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அதனால் தாவாவனது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்குரையில் பத்தி 3–ல் A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் எனது பெயரில் உள்ளது போன்று வழக்குரைக்கப்பட்டுள்ளது என்றும், A அட்டவணை சொத்தினை பொறுத்து மட்டுமே எனது பெயரில் உள்ளது என்றும், B அட்டவணை சொத்தினை பொறுத்து எனது பெயரில் ஆவணங்கள் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக இரண்டு அட்டவணை சொத்துக்களும் எனது பெயரில் உள்ளது போன்று வழக்குரைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. B அட்டவணை சொத்தில் வேலி அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு முன்பு இருந்த நில உரிமையாளர்கள் வேலி அமைத்துள்ளனர். மேற்படி சங்கதி பொய் என்றும், மேற்சொன்னபடி அரசாங்கதிலிருந்து பட்டுப்புழு வளர்ச்சி துறையினர் B அட்டவணை சொத்தை பார்வையிட்டது பின்னிட்டு 1 மாதம் கழித்து என்னால் புதியதாக வேலி அமைக்கப்பட்டது என்றால் A அட்டவணை சொத்தில் என்னால் வேலி அமைக்கப்பட்டது. B அட்டவணை சொத்தில் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி ஆக்கிரமிப்பு செய்ததன் பின்னிட்டு என்னால் வேலி போடப்பட்டது என்றால் தற்போது நினைவில் இல்லை. A அட்டவணை சொத்தில் என்னனென்ன உள்ளது என்று எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியாது, 10 ஏக்கர் நிலம் உள்ளது மட்டும் தெரியும். மேற்படி பதில்கள் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்காடு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரிற்கு நடவடிக்கை

எடுக்காததால் மேல் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் சம்பவம் குறித்து புகார் அளித்தபோது பிரதிவாதிகள் மற்றும் புகாரில் குறிப்பிட்ட நபர்களை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரணை செய்தார்கள், பிரதிவாதிகள் மற்றும் புகாரில் குறிப்பிட்ட நபர்களை விசாரித்ததாக சொன்னார்கள்.

6. வழக்கு சொத்திற்கு வந்திருந்தது அரசாங்க அதிகாரிகள் என்று போலீசார் தங்களது விசாரணையில் தெரிந்துகொண்டதால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, போலீசார் உரிய உரிமையியல் நீதிமன்றத்தினை அனுக வேண்டி எனக்கு அறிவுறுத்தினர். B அட்டவணை சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்தில் நான் புதியதாக வேலி அமைத்துள்ளேன் என்றும், நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தினை பார்வையிட்டால் உண்மை தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. தற்போது B அட்டவணை சொத்தில் அரசாங்கம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாஜிய மூலம் தேதியான 15.06.2022-ம் தேதிக்கு பின்னர் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதி குறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

7. B அட்டவணை சொத்தினை அனுபவிப்பதற்கு முந்தைய நில உரிமையாளருக்கும், அவர்களுக்கும் முந்தைய நில உரிமையாளர்களுக்கும்

இடையே 22.12.1994–ம் தேதியன்று ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான், மேற்படி ஒப்பந்த ஆவணத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சட்டப்படியாக செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்தினை அரசாங்கம் அதன் பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றும், அதனை தடுக்க வேண்டி இந்த தாவா வழக்கானது மறைமுகமாக பிரதிவாதிகளை காரணம் காட்டி பொய்யாக தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யதக்கதக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடவில்லை என்றும், பிரதிவாதிகள் மக்கள் பிரதிநிதிகள் என்பதால் அரசாங்கத்திற்கு தேவைப்படும் நிலங்களை மக்கள் பயன்பாட்டிற்கு அடையாளம் காட்டவேண்டி உடன் வந்ததால் மேற்படி பிரதிவாதி காரணம் சொல்லி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).**

**<u>(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 05.04.P.M.)</u>**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.